ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2320/58 - 2023 පෙබරවාරි මස 22 වැනි බදාදා - 2023.02.22

*2320/58 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுக்கள் சட்டம்*

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுக்கள் சட்டத்தின் 39 (3) ஆம் வாசகத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆவது வாசகத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை*

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுக்கள் சட்டத்தின் 39 (3) ஆம் வாசகத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆவது வாசகத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, இலங்கைக் காற்பந்து சம்மேளனத்தின் நிதி நிருவாக, நிருவாக, விளையாட்டு ஊக்குவிப்பு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு, அதற்கு உரிய மேற்பார்வை மற்றும் பரிந்துரையினை உள்ளடக்கிய முழுமையான அறிக்கை இவ் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினம் தொடக்கம் இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் எனக்கு சமர்ப்பிப்பதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குழுவினை நியமிக்கின்றேன்.*

I. *சரோஜினி குசலா வீரவர்தன - ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி (குழுத் தலைவர்)*
II. *கிங்ஸ்லி பிரநான்து - முன்னாள் அமைச்சின் செயலாளர் (குழுவின் அங்கத்தவர்)*
III. *சுதத் நாகஹமுல்ல - ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் (குழு அங்கத்தவர்)*
IV. *ஆனந்த பீரிஸ் - ஓய்வு பெற்ற ரிய அத்மிரால் (குழு அங்கத்தவர்)*
V. *சுசில் ரோஹான் இராமநாயக்க (குழு அங்கத்தவர்)*
VI. *சட்டத்தரணி சலினி பிரநான்து - குழுவின் செயலாளர்*

*டப். எம் ஜராங்கனி விஜேரத்ன - தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்தாளர்.*

1A - G 38933 — 07 (2023/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இக்குழு கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

1. காற்பந்து சம்மேளனத்தின் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அதன் புதிய பிரமாணக் குறிப்பினை தயாரிக்கும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்படுத்தல்.
2. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் காற்பந்து சம்மேளனத்தின் நிதி நிருவாகம்.
3. காற்பந்து சம்மேளனத்தின் நிருவாகம்.
4. வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் தாபிக்கப்பட்டுள்ள பெயரளவிலான காற்பந்து சம்மேளனம்.
5. அலுவலக செயற்பாடுகளுக்காக ஊழியர்களை சேர்த்துக் கொள்ளும் ஒழுங்கு விதிகள், சம்பள கொடுப்பனவு மற்றும் அவர்களின் செயற்பாடுகள்.
6. எதிர்கால காற்பந்து விளையாட்டின் மேம்பாட்டிற்காக செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பரிந்துரை.

அனைத்து பிரஜைகளும் தமது விருப்பத்திற்கு அமைய தாம் விரும்பிய விளையாட்டில், தாம் விரும்பிய பிரதேசத்தில் ஈடுபடுவதற்கு காணப்படும் மனிதாபிமான உரிமையினை பாதுகாக்கக் கூடிய வகையில் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை விளையாட்டில் ஈடுபடுத்துவதற்காக 39 (3) ஆம் வாசகத்தின் கீழ் தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்துத் தகவல்கள்: அச் சபை, குழு, சங்கம் மற்றும் ஏனைய சபைகளினால் பெற்றுக் கொள்வதற்கும் இக் குழுவிற்கு அதிகாரங்கள் காணப்படுவதாக இத்தால் அறிவிக்கிறேன்.

உங்களின் அறிவு, அடைவு மட்டங்கள் மற்றும் பக்கசார்பற்ற விடயங்கள் தொடர்பாக நேர்மையாக மற்றும் நம்பிக்கையுடன் மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய தாபிக்கப்பட்டுள்ள விஷேட விசாரணைக் குழுவில் மேற்கூறப்பட்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள விசாரணைகளை அமுல்படுத்தும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இத்தால் கட்டளையிடுகிறேன்.

**ரொசான் ரணசிங்ஹ** (பா.உ),
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.

கொழும்பில்,
2023, பெப்புருவரி 21.

EOG 02 - 0263